**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 05–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(3வாதி ஆஜர். 1,2,4 வாதிகள் ஆஜர் இல்லை. 2ம்பிரதிவாதி ஆஜர். 1,3,4,5,6,7 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். மற்றும் 6,7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.)

அ.வ.எண்.256/2018

வா.சா.1 சதீஸ்குமார் த/பெ சுப்பிரமணி

**1,2பிரதிவாதிகள் தரப்பில்குறுக்குவிசாரணை :–**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலம் நான் படித்துபார்த்துதான் கையெப்பமிட்டேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம்கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் எங்களுக்கு முழு உரிமை உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். உயில்சாசனம் மட்டும் விளம்புகை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் உயில் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்துக்கள் தங்களுக்கு உரிமை உடையது என்று விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல.

2. நான் மற்றும் இதர வாதிகள் தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் குறிப்பிட்டு கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தனாது 300 சதுர அடிகள் எவ்வளவு சந்தை மதிப்பு என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பும் தெரியாமல் நானும், என்னுடைய மகன் குருசரண் ஆகியோர் உயில் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் விளம்புகை பரிகாரம் கோராததால் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.

3. சுப்பிரமணி, சந்திரசேகரன், வசந்தி மற்றும் சண்முகம் ஆகியோருடன் எங்களது பாட்டி அன்பு, பாசம், நேசத்துடன் கவனித்து வந்தார்களா என்றால் சந்திரசேகரன் எங்களுடன் இல்லை மற்றும் வசந்தி, சுப்பிரமணி, சண்முகம்

ஆகியோர் எங்களது பாட்டியை அன்புடனும், பாசத்துடனும் கவனித்து வந்தார்கள்.
4. சந்திரசேகரன் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. சந்திரசேகரன் வாரிசுகள் தான் 1,2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். உயில் சாசனத்தில் உள்ள சொத்து எப்படி எனது பாட்டிக்கு பாத்தியமானது என்றால் அவர் சுயமாக சம்பாதித்தது. மேற்படி எந்த ஆவணத்தின் படி உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் எனது பாட்டிக்கு பாத்தியமானது என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் மொத்த அளவு 30 அடி நீளம், 15 அடி அகலம் கொண்டது. அதில் 2 அடி சந்து உள்ளது.
5. அசல் உயில் சாசனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்க்கு முன்பாகவரை யாரிடம் இருந்தது என்றால் என்னிடம் இருந்தது. அந்த உயில் சாசனம் எத்தனை ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டது என்றால் அனைத்து அசல் ஆவணங்களும் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். உயில் சாசனத்தை பத்திர எழுத்தர் ரவி என்பவர் தயார் செய்தார். ஆனால் எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது ஆனால் என் பாட்டி சொல்லி தான் தெரியும். உயில் எழுதி வைத்துபின்பு என் பாட்டி என்னிடம் சொன்னார். உயில் எழுதிய பின்பு பாட்டியிடம் தான் உயில் இருந்தது.
6. உயில் சாசனத்தில் எனது பாட்டி கைரேகை வைத்துள்ளாரா அல்லது கையெப்பம் செய்துள்ளாரா என்றால் கைரேகை வைத்துள்ளார். மீண்டும் சாட்சி என் பாட்டி கையெப்பமிட்டுள்ளார் என்று கூறினார். உயில் சாசனத்தில் எனது பாட்டி எத்தனை தாள்களில் கையொப்பமிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது நீதிமன்றத்தில் கொடுத்துவிட்டேன். உயில் ஆவணததில் யார் யார் சாட்சி கையொப்பமிட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மீண்டும் சாட்சி இரண்டு பேர் போட்டார்கள் என்று கூறினார்.
7. உயிலில் என்னுடைய பாட்டி சந்திரசேகரன், சுப்பிரமணி, வசந்தி, சண்முகம் ஆகியோர்களுக்கு சொத்துக்கள் தனித்தனியாக பிரித்து கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டதா என்றால் சரிதான். ஆனால் இந்த தாவா சொத்துக்கு மேற்கண்ட பிரித்த சொத்துக்களுக்கும் சம்மந்தம் இல்லை. உயில் எழுதுவதற்க்கு இரண்டு வருடங்களுக்கு முன்பான 2013ம் வருடம் முதல்

உடல் நிலை சரியில்லாமலும், சரிவர சுயநினைவு இல்லாமலும் என் பாட்டி இருந்து வந்தார் என்றால் சரியல்ல.

8. என் பாட்டி இறந்த பிறகு உயில் சாசனம் யாரிடம் இருந்தது என்றால் என்னுடைய பாட்டியின் பீரோவில் இருந்தது. அந்த உயிலை யார் எடுத்தார்கள் என்றால் என் தந்தை மற்றும் 3ம் பிரதிவாதி சண்முகம் எடுத்து கொடுத்தார்கள். அப்போது அனைத்து சொந்தபந்தங்களும் இருந்தது. 3ம் பிரதிவாதி சண்முகம் கூடுதல் 2ம் சார்பு நீதிமன்றம் ஈரோட்டில் அசல் வழக்கு எண்.212/2018 என்று வழக்கு என்மீது தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் சரிதான்.

9. மேற்கண்ட வழக்கிலும் இந்த வழக்கில் கோரியபடியே பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் என் தம்பி பிரசன்னவிற்க்கு உயில் சாசனம் விளம்புகை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் உள்ள என்னுடைய வழக்கறிஞர் தான் மேற்கண்ட வழக்கிலும் வழக்கறிஞராக ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்னையும் மற்ற வாதிகளையும் அமைதியான சுவாதீனம் மற்ற அனுபவத்தை தொந்தரவு செய்கிறார்கள் என்று தாவா சொத்து சம்மந்தாக பரிகாரம் என்னுடைய பிரமாணவாக்குமூலம் மற்றும் தாவா வழக்கில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

10. மேற்கண்ட பரிகாரம் தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.1 ஆவணமான உயிலை எனது பாட்டி சுயநினைவோடு எனது மகன் குருசரணுக்கு எழுதிவைக்கவில்லை என்பதால் இந்த ஆவணம் செல்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரிய விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்பதாலும் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா சொத்து 1,2 பிரதிவாதிகளுக்கு பாகம் பெற உரிமை உடையவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

11. அசல் வழக்கு எண். 212/2018 என்ற வழக்கு 2ம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் ஈரோடு அதில் நான் ஆஜராகாமல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிலும் 3ம் பிரதிவாதி சண்முகம் ஆஜராகாமல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று

சொன்னால் சரிதான். நானும், 3ம் பிரதிவாதியான சண்முகம் ஆகிய இருவரும் எனது பாட்டி, பாப்பாத்தி சரிவர சுயநினைவு இல்லாமல் இருந்தபோது வா.சா.1 ஆவணமான உயிலை ஏமாற்றி தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

3 முதல் 7 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்டுகிறது.